யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, யூன் - 2015
## Term Examination, June - 2015

| தரம் :- 13 (2015) | கணக்கீடு - I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

அறிவுறுத்தல்கள்:-

- 01 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- 31 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவும் இரண்டு புள்ளிகளை கொண்டதாகும்.
- உங்கள் சுட்டெண்ணை மேலே கொடுக்கப்பட்டுள்ள உரிய கூட்டினுள் எழுதுக.

சுட்டெண் :....................................

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் 1 இற்காக | |
| வினா இல | புள்ளிகள் |
| 01 - 30 | |
| 31 - 50 | |
| மொத்தம் | |

01) பின்வரும் கூற்றுக்களில் எக்கூற்றுக்கள் இரட்டைப்பதிவு முறைமை தொடர்பாக சரியானது / சரியானவை

A - இது எல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பேரேட்டில் சரியாகப் பதியப்பட்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்துகின்றது.

B - இது பேரேட்டுக்கு மாற்றப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் எண் கணித செம்மையை உறுதிப்படுத்த உதவுகின்றது.

C - இது கொடுக்கல் வாங்கல்களை பேரேட்டுக்கு மாற்றுகின்ற ஒரு முறையாகும்.

D - இரட்டைப் பதிவு முறையானது கணக்கீட்டு சமன்பாட்டிற்கான அடிப்படையை வழங்குகின்றது.

(1) (a), (b), (c) சரியானவை
(2) (a), (b), (d) சரியானவை
(3) (b), (c), (d) சரியானவை
(4) (b), (d) சரியானவை
(5) (a), (b), (c), (d) சரியானவை (..........)

02) ஒரு வணிகத்தின் வங்கி மேலதிகப்பற்று அதன் உரிமையாளரின் தனிப்பட்ட நிதியில் இருந்து தீர்க்கப்பட்டுள்ளது. இந்தக் கொடுக்கல் வாங்கல் வணிகத்தின் கணக்கீட்டுச் சமன்பாட்டினை எவ்வாறு பாதிக்கும்?

(1) சொத்தும், உரிமையும் இரண்டும் அதிகரிக்கும்
(2) பொறுப்பு அதிகரித்தலும் உரிமை குறைவடைதலும்
(3) பொறுப்பு குறைவடைதலும் உரிமை அதிகரித்தலும்
(4) சொத்தும் பொறுப்பும் குறைவடைதல்
(5) சொத்தும் உரிமையும் குறைவடைதல் (..........)



agaram.lk
Scanned with CamScanner

03) பின்வரும் கூற்று / கூற்றுக்களில் எது சரியானது / சரியானவை?

A - ரூபா 850, 000க்கு வாங்கிய காணி 2015.03.31 இன் நிதி அறிக்கையில் 1150 000 காட்டப்பட்டமை வரலாற்றுக் கிரய எண்ணக்கரு மீறப்பட்டமையாகும்.

B - கொடுக்கல் வாங்கல்களையும், நிகழ்வுகளையும் ஏனைய பகுதியினரின் சுதந்திர பேணும் வகையில் பதிவதற்கு தொழில் முழுமை கூறு எண்ணக்கரு பொருத்தமான அமைகின்றது.

C - நிதிநிலைமைக் கூற்றில் நடைமுறையல்லா சொத்துக்களின் திரண்ட பெறுமான தே ஏற்பாடாக காட்டப்படுதல் தொடர்ந்து செல் எண்ணக்கருவிற்கு அமைவானதாகும்.

(1) (a), (b) மாத்திரம் (2) (b, (c) மாத்திரம்

(3) (b) மாத்திரம் (4) (a) மாத்திரம்

(5) (a), (b), (c) ஆகியன எல்லாம்

(.....

04) பின்வருவனவற்றில் சரியான கூற்று / கூற்றுக்கள் எது / எவை?

A - தொடர்ச்சியான நிலைப்புத் தன்மையற்ற வணிகங்களின் அனைத்துச் சொத்துக்க நடைமுறைச் சொத்துக்களாகக் கருதப்படும்.

B - பாதுகாப்பு எண்ணக்கருவிற்கு அமைய காணியொன்றின் பெறுமதி அதிகரிப்பினை கணக்குகளில் பதிவு செய்தல் வேண்டும்.

C - கொள்ளை மாறாமை எண்ணக்கருவிற்கு அமைய வணிகன் தெரிவு செய்த கணக்கீ கொள்கைகளை தொடர்ந்தும் பயன்படுத்தல்

(1) A மட்டும் (2) B மட்டும் (3) C மட்டும்

(4) A, B மட்டும் (5) A, C மட்டும்

(....

05) நிதிக் கணக்கீட்டுக்கு எண்ணக்கரு ரீதியான சட்டகத்தை உருவாக்குவதற்கு காரண அமைந்தது பின்வருவனவற்றுள் எதுவாகும்?

A - கணக்கீட்டு நியமத்தை தயாரிப்பதற்கான அடிப்படையை வழங்கல்.

B - நிதிக் கூற்றைப் பயன்படுத்துவோருக்கு அவற்றை நன்கு புரிந்து கொள்ள ஆற்ற வழங்குதல்.

C - உரிய கணக்கீட்டு நியமம் இல்லாத சந்தர்ப்பத்தில் நிதிக்கூற்றை தயாரிப்பதற்கு வ காட்டுதல்.

D - நிதித் தகவல்களின் பண்புத் தரத்தை மேம்படுத்துவதற்கு கோட்பாட்டு ரீதியா அடிப்படையை வழங்குதல்.

(1) A யும் B யும் மட்டும் (2) A யும் B யும் C யும் மட்டும்

(3) C யும் D யும் மட்டும் (4) A யும், B யும் C யும், D யும் எல்லாம்

(5) A யும், B யும், D யும் மட்டும்

(....

06) பின்வரும் வழுக்களில் எதனை பரீட்சை மீதியில் இருந்து கண்டுபிடிக்க முடியும்?

(1) அலுவலக சம்பளங்கள் ரூபா 20,000 அலுவலக செலவீனங்கள் எனப் பதிவி பட்டிருந்தன.

(2) கடன்பட்டோரிடம் பெறப்பட்ட காசு ரூபா 50,000 காசு புத்தகத்திலும் கடன்பட் கட்டுப்பாட்டுக் கணக்கிலும் ரூபா 5000 எனப் பதியப்பட்டிருந்தது.

(3) கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 120000 இருப்புகள் உபகரணக் கணக் வரவிலும், கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கிலும் செலவிலும் பதிவிடப்பட்டுள்ளது

(4) காசு விற்பனையொன்று விற்பனைக் கணக்கில் ரூபா 273000 என்பதற்குப் பதிலாக 237000 எனப் பதிவிடப்பட்டுள்ளது. ஆனால் இது காசுப் புத்தகத்தில் சரி பதிவிடப்பட்டுள்ளது.

(5) கொள்வனவுத் திரும்பல் ரூபா 60,000 கொள்வனவுக் கணக்கில் செல பதியப்பட்டள்ளது.

(....

agaram.lk



Scanned with CamScanner

07) முடிவுப் பொருட்களின் இருப்புக் கிரயத்தை பின்வரும் கிரயங்களுக்கு அமைவாக கணிப்பிடுக.

| | ரூபா |
|---|---|
| கொள்வனவு செய்த பொருட்களின் பரிசோதனைக் கிரயம் | 12,000 |
| கொள்வனவு செய்த பொருட்களின் பட்டியல் விலை | 60,000 |
| பட்டியல் விலையில் வியாபாரக் கழிவு | 3,000 |
| களஞ்சிய மேற்பார்வையாளர் சம்பளம் | 8,000 |
| பொருட்கள் விற்பனைக்கு தயாராக்குவதற்கு ஏற்பட்ட பொதிகட்டும் கிரயம் | 11,000 |

(1) ரூபா - 80000 (2) ரூபா - 83000 (3) ரூபா - 91000
(4) ரூபா - 77000 (5) ரூபா - 69000 (..........)

08) வணிகமொன்றினால் பெறப்பட்ட இயந்திரம் தொடர்பில் ஏற்பட்ட கிரயங்கள் தரப்பட்டுள்ளன.

| | ரூபா |
|---|---|
| * இயந்திரத்தின் கொள்வனவு விலை | 220,000 |
| * இயந்திரத்தை நிறுவும் செலவு | 20,000 |
| * தீர்மானிக்கப்பட்ட இடத்துக்கு கொண்டு வரும் செலவு | 30,000 |
| * இயந்திரத்தை பொருத்துவதற்கு முன்னர் வேலைத்தளம் ஆயத்தப்படுத்தல் கிரயம் | 15,000 |
| * செயற்பாட்டு நிலையில் இருந்தவேளை உதிரிப்பாகங்கள் மாற்றி அமைத்தல் கிரயம் | 10,000 |
| * வருடாந்த இயந்திர பராமரிப்பு கிரயம் | 5,000 |

மேலே கூறப்பட்டவற்றின்படி இயந்திரம் பொறியின் கிரயப் பெறுமதியாக அமைவது
(1) ரூபா - 250,000 (2) ரூபா - 270,000 (3) ரூபா - 285,000
(4) ரூபா - 295,000 (5) ரூபா - 300,000 (..........)

09) கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டு கணக்கு தொடர்பாக பின்வரும் கூற்றுக்களில் எது பிழையானது?
(1) இது கடன்கொடுத்தோரின் சுருக்கிய தகவல்களை வழங்குகின்றது.
(2) இது கொடுக்கல் வாங்கல்களை பதிதலில் இரட்டைப் பதிவு முறையை பின்பற்றுகிறது.
(3) இது கடன் கொடுத்தோரின் துணைப் பேரேட்டில் காணப்படும்.
(4) இது பரீட்சை மீதியில் காணப்படும்.
(5) இது குறித்த திகதியிலுள்ளவாறான கடன்கொடுத்தோர் மீதியை வழங்குகிறது. (..........)

10) வணிகமொன்று ரூபா 600000 இனை 2014 ஆகஸ்ட் 01 ல் வாடகையாக செலுத்தியது. இத்தொகை 2013 ஒக்டோபர் 01 தொடக்கம் 2015 மே 31 வரையுமான காலப் பகுதிக்காகும். ஆனால் 2014 ஆகஸ்ட் 01 இல் வாடகை ஒப்பந்தம் புதுப்பிக்கப்படும் போது மாதாந்த வாடகைத் தொகையானது 100% த்தால் அதிகரிக்கப்பட்டது.
31.12.2014 முடிவடைந்த ஆண்டு வருமானக் கூற்றிலும் 31.12.2014 இல் நிதிநிலைமைக் கூற்றிலும் காணப்படும் உருப்படிகள்

| | வருமானக் கூற்று | நிதிநிலைமைக்கூற்று |
|---|---|---|
| (1) | ரூபா - 360,000 | ரூபா - 150,000 |
| (2) | ரூபா - 450,000 | ரூபா - 150,000 |
| (3) | ரூபா - 340,000 | ரூபா - 200,000 |
| (4) | ரூபா - 400,000 | ரூபா - 200,000 |
| (5) | ரூபா - 480,000 | ரூபா - 120,000 |

(..........)



agaram.lk
Scanned with CamScanner

11) கட்டிடப் பராமரிப்பு, வருடத்துக்கான வருமானவரி, பற்று, ஐயக்கடன் ஏற்பாடு போன்ற ஒவ்வொரு கணக்கு வகைகளையும் ஒழுங்குமுறையாக வகைப்படுத்தும் பொழுது அமை எம்முறையில் அமையும்?

(1) செலவுகள், செலவுகள், உரிமை, சொத்துக்கள்

(2) செலவுகள், பொறுப்புக்கள், செலவுகள், வருமானங்கள்

(3) செலவுகள், வருமானங்கள், உரிமை, சொத்துக்கள்

(4) சொத்துக்கள், சொத்துக்கள், உரிமை, பொறுப்புக்கள்

(5) சொத்துக்கள், வருமானங்கள், உரிமை, சொத்துக்கள் (........)

12) 2015.03.31 ஆந் திகதியில் முடிவடைந்த வருடத்தில் நட்டமாக ரூபா 75,000 தை பெற்ற வணிகமொன்றிற்குரிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளது. இவ்வணிகம் 2014.04.01 இல் ஆரம்பிக்கப்பட்டது.

| | ரூபா 000 |
|---|---|
| வருடத்திற்கான மொத்த பொறுப்பு அதிகரிப்பு | 900 |
| பற்று | 50 |
| மேலதிக மூலதனமிடல் | 225 |

2015.03.31 ஆந் திகதியில் முடிவடைந்த வருடத்தின் சொத்துக்களின் அதிகரிப்பு அல்லது குறைவின் பெறுமதியை குறிப்பிடவும்

(1) ரூ. 825000 த்தினால் அதிகரிப்பேற்பட்டுள்ளது.

(2) ரூ. 975000 த்தினால் குறைவேற்பட்டுள்ளது.

(3) ரூ. 975000 த்தினால் அதிகரிப்பேற்பட்டுள்ளது.

(4) ரூ. 1000000 த்தினால் அதிகரிப்பேற்பட்டுள்ளது.

(5) ரூ. 1150000 த்தினால் அதிகரிப்பேற்பட்டுள்ளது. (........)

13) வணிகமொன்று 2014.03.31 இல் ரூபா 70,000 கிரயமுள்ள உபகரணமொன்றை வழங்கி ரூபா 100,000 பெறுமதியான புதிய உபகரணமொன்றை அன்றே பெற்றுக் கொண்டது. இதற்காக பழைய உபகரணத்துடன் ரூபா 40,000 காசும் செலுத்தப்பட்டது. இவ் உபகரண வழங்கலினால் பெறப்பட்ட இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு?

agaram.lk

(1) இலாபம் - 10,000

(2) நட்டம் - 10,000

(3) இலாபம் - 30,000

(4) நட்டம் - 30,000

(5) நட்டம் - 50,000 (........)

14) கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கின் மீதியில் குறைவை ஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கல்கள் பின்வருவனவற்றுள் எது / எவை?

A - கடன்பட்டோர் மீதியை தீர்க்கும் போது கழிவொன்றை அனுமதித்தல்

B - கடன்பட்டோர் ஒருவரால் திருப்பி அனுப்பிய பழுதடைந்த பொருட்கள்

C - கடன்பட்டோர் மீதியை மீளப்பெற முடியாததால் அம்மீதியைப் பதிவளித்தல்

(1) B மாத்திரம்

(2) A, B மாத்திரம்

(3) A, C ஆகியன மாத்திரம்

(4) B, C ஆகியன மாத்திரம்

(5) A, B, C ஆகியன எல்லாம் (........)



Scanned with CamScanner

➢ வினா இலக்கம் 15, 16 விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தவும்

"திருவள்ளுவர்" வாசிகசாலை சங்கத்தின் 31.03.2014 இல் ஆயுள் அங்கத்துவச் சந்தாக் கணக்கு மீதி ரூபா 150,000 ஆகும். இதில் 10% வருடாந்த அங்கத்தவர் சந்தாக் கட்டணமாக வருமானத்துடன் சேர்க்கப்படும். வருட அங்கத்துவக் கட்டணம் ரூபா 500 ஆக இருப்பதுடன் 2015.03.31 ல் ஆயுள் அங்கத்தவர் தவிர்ந்த அங்கத்தவர் எண்ணிக்கை 200 ஆகும். 2014.03.31 இல் அங்கத்துவக் கட்டணம் செலுத்தாத அங்கத்தவர்கள் 20 பெரும் எதிர்வரும் வருடத்துக்கான அங்கத்துவக் கட்டணத்தைச் செலுத்திய அங்கத்தவர்கள் 25 பேரும் இருந்தனர். 2015.03.31 இல் அங்கத்துவக் கட்டணம் செலுத்தாத அங்கத்தவர்கள் 30 பேரும், எதிர்வரும் வருடத்துக்காக அங்கத்துவ கட்டணம் செலுத்திய அங்கத்தவர் 20 பேரும் இருந்தனர்.

15) 2015.03.31 இல் முடிவடைந்த வருடத்துக்கான அங்கத்துவக் கட்டண வருமானம்

(1) ரூபா 67,500 (2) ரூபா 90,000 (3) ரூபா 102,500
(4) ரூபா 115,000 (5) ரூபா 150,000 (.........)

16) 2015.03.31 இல் முடிவடைந்த வருடத்துக்கான காசாகப் பெற்ற அங்கத்துவக் கட்டணத்தொகை

(1) ரூபா 52,500 (2) ரூபா 75,000 (3) ரூபா 87,500
(4) ரூபா 92,500 (5) ரூபா 100,000 (.........)

17) பங்குடமை வணிக கட்டளைச் சட்டத்தின் 24 ஆவது சரத்தில் உள்ளடங்கியுள்ள சில விடயங்கள் பின்வருமாறு

A - பங்காளரின் மூலதனத்துக்கு 5% வட்டி உரிமையாகும்
B - பங்காளருக்கு சம்பளம் பெற உரிமை இல்லை
C - பங்காளர் மூலதனத்துக்கு மேலதிகமாக வழங்கிய கடனுக்கு 10% வட்டி உரிமையாகும்
D - பங்காளருக்கு இடையில் இலாப நட்டம் சமனாக பிரிக்கப்படல் வேண்டும்

இச்சரத்து தொடர்பான சரியான விடயங்களை உள்ளடக்கிய விடை

(1) A யும் D யும் (2) D யும் C யும் (3) B யும் D யும்
(4) D யும் C யும் (5) B மட்டும் (.........)

18) சமனாகப் பகிர்ந்து கொள்ளும் லீலாவும், நீலாவும் கொண்டு நடாத்தும் பங்குடமையில் 2014 செப்ரெம்பர் 30 திகதி $\frac{1}{3}$ இலாபத்தையும் மாதாந்தம் ரூபா 20,000 சம்பளத்தையும் பெற்றுக்கொள்வது என்ற நிபந்தனையுடன் மாலா என்பவர் சேரத்துக் கொள்ளப்பட்டார். 2015.03.31 திகதியில் முடிவடைந்த காலப்பிரிவில் உழைக்கப்பட்ட தேறிய இலாபம் ரூபா 1,200,000 ஆகும். இத்தொகை வருடம் முழுவதும் சீரான முறையில் உழைக்கப்பட்டது. 2015.03.31 திகதியில் முடிவடைந்த வருடத்தில் லீலா மற்றும் மாலா ஆகியோர் பங்குடமையில் இருந்து பெற்றுக் கொண்ட வருமானமானது.

| | லீலா (ரூபா) | மாலா (ரூபா) |
|---|---|---|
| (1) | 160 000 | 200 000 |
| (2) | 300 000 | 160 000 |
| (3) | 360 000 | 460 000 |
| (4) | 360 000 | 160 000 |
| (5) | 460 000 | 280 000 |

(.........)

19) உபகாரப் பங்கு வழங்கல் தொடர்பான சிலகூற்றுக்கள் வருமாறு

A - பங்குதாரர் உரிமையாண்மை அதிகரித்தல்
B - நிதி நிலைமைகளில் மாற்றம் ஏற்படாது
C - காசுப்பாய்ச்சல் உள்வருகை அதிகரிக்கும்

மேலே குறிப்பிட்ட கூற்றுக்களில் உபகாரப் பங்கு தொடர்பான சரியான கூற்று / கூற்றுக்கள் யாது / யாவை?

(1) A மட்டும் (2) B மட்டும்
(3) C மட்டும் (4) A மற்றும் B மட்டும்
(5) A, B, C ஆகிய மூன்றும் (.........)



agaram.lk
Scanned with CamScanner

➢ வினா இலக்கம் 20, 21 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களை பயன்படுத்தவும்

வரையறுத்த நாவலர் கம்பனிக்குரிய தகவல்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

| | 2015.03.31 (000ல்) | 2014.03.31 (000ல்) |
|---|---|---|
| **கூறப்பட்ட மூலதனம்** | | |
| பங்கொன்று ரூ 200 பெறுமதியான சாதாரண பங்குகள் | 13000 | 13000 |
| பங்கொன்று ரூ 5/= பங்குலாபம் பெறத்தக்க முன்னுரிமைப் பங்குகள் (200 000) | 4000 | 4000 |
| **ஒதுக்கங்கள்** | | |
| பொது ஒதுக்கம் | 3400 | 3000 |
| நிறுத்தி வைத்த உழைப்பு | 3600 | 2000 |
| **நடைமுறை அல்லாத பொறுப்புக்கள்** | | |
| 15% நீண்டகாலக் கடன் | 2000 | 2000 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | |
| செலுத்தவேண்டிய வருமான வரி | 100 | 80 |
| கடன்கொடுத்தோர் | 140 | 150 |

2015.03.31 இல் முடிவடையும் வருடத்தில் செலுத்திய வருமான வரி ரூபா 280,000 ஆகும்.

20) 2015.03.31 இல் முடிவடைந்த வருடத்தில் வரிக்கு முன்னரான இலாபம்

(1) ரூபா 1600000 (2) ரூபா 2400000 (3) ரூபா 2700000

(4) ரூபா 3000000 (5) ரூபா 3300000 ( )

21) 2015.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான வட்டிக்காப்பு விகிதம்

(1) 08 முறை (2) 09 முறை (3) 10 முறை

(4) 11 முறை (5) 12 முறை ( )

➢ வினா இலக்கம் 22, 23 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்கு கீழ்வரும் தகவல்களை பயன்படுத்தவும்

2015 ஜனவரி மாதத்திற்கான தகவல்கள்

| | ரூபா |
|---|---|
| விற்பனை மூலம் பெற்ற காசு | 220000 |
| கொள்வனவிற்காக செலுத்திய காசு | 60000 |
| செயற்பாட்டு செலவு செலுத்தியது | 30000 |
| நிதியீட்ட நடவடிக்கையால் தேறிய காசு அதிகரிப்பு | 70000 |

| | 2012.01.31 ல் | 2011.12.31 ல் |
|---|---|---|
| மூன்று மாத திறைசேரி உண்டியல் முதலீடு | 80000 | இல்லை |
| காசு மீதி | 30000 | 45000 |

22) 2015 ஜனவரி மாதத்தில் காசும் காசிற்கு சமமானவைகளில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு அல்லது குறைவு பின்வருவனவற்றுள் எது?

(1) ரூபா 15000 குறைவு (2) ரூபா 120000 அதிகரிப்பு

(3) ரூபா 110000 அதிகரிப்பு (4) ரூபா 65000 அதிகரிப்பு

(5) ரூபா 15000 அதிகரிப்பு ( )

23) முதலீட்டு நடவடிக்கையால் ஏற்பட்ட தேறிய காசுப் பாய்ச்சல் அதிகரிப்பு அல்லது குறைவு யாது?

(1) ரூபா 80000 குறைவு (2) ரூபா 135000 குறைவு

(3) ரூபா 80000 அதிகரிப்பு (4) ரூபா 135000 அதிகரிப்பு

(5) ரூபா 215000 குறைவு ( )



agaram.lk
Scanned with CamScanner

24) வணிகமொன்றின் ஊழியர்களின் மாதாந்த மொத்த சம்பளம் ரூபா 400000 ஆகும். ஊழியர் சேமலாப நிதிக்கு வேலை வழங்குநர்களின், ஊழியர்கள் பங்களிப்பு முறையே ரூபா 60000 ஆகவும் ரூபா 40000 ஆகவும் காணப்பட்டது. சம்பளம் காசாக உரிய மாதத்தில் செலுத்தப்படுவதுடன் ஊழியர் சேமலாப நிதி ஊழியர் நம்பிக்கை நிதிப் பங்களிப்பானது எதிர்வரும் மாதத்திலே செலுத்தப்படுகிறது. இக் கொடுக்கல் வாங்கல்களின் விளைவானது கணக்கீட்டுச் சமன்பாட்டில் எம்முறையில் காட்டப்படும்.

| | சொத்துக்கள் (ரூ) | = | பொறுப்புக்கள் | + உரிமை (ரூ) |
|---|---|---|---|---|
| (1) | − 360000 | = | + 40000 | − 400000 |
| (2) | − 360000 | = | + 60000 | − 420000 |
| (3) | − 360000 | = | + 100000 | − 460000 |
| (4) | − 400000 | = | + 100000 | − 500000 |
| (5) | − 460000 | = | + 40000 | − 500000 |

(.........)

25) கம்பனியொன்றினால் உற்பத்தி செய்யப்படும் பொருளொன்றின் பின்வரும் தகவல்கள் தரப்படுகின்றன.

| | |
|---|---|
| முதன்மைக் கிரயம் | ரூ 1200000 |
| பாதிடப்பட்ட மேந்தலைக் கிரயங்கள் - உற்பத்தித் திணைக்களம் | ரூ 700000 |
| - சேவைத் திணைக்களம் | ரூ 100000 |
| உற்பத்தி அலகுகளின் எண்ணிக்கை | 150000 |
| பாதிடப்பட்ட இயந்திர மணித்தியாலங்கள் | 100000 |
| அலகொன்றுக்கான இயந்திர மணித்தியாலங்கள் | 5 |

இயந்திர மணித்தியாலத்துக்கான மேந்தலை உறிஞ்சல் வீதமும் அலகொன்றுக்கான உற்பத்திக் கிரயமும் பின்வருவனவற்றுள் எது?

| | மேந்தலை உறிஞ்சல் வீதமும் இயந்திர மணித்தியாலமும் | அலகொன்றுக்கான உற்பத்திக் கிரயமும் (ரூ) |
|---|---|---|
| 1) | 6 | 38 |
| 2) | 7 | 43 |
| 3) | 7 | 13.33 |
| 4) | 8 | 16 |
| 5) | 8 | 48 |

(.........)

26) குறித்த ஓர் கம்பனியின் வருடாந்த கேள்வி 40000 அலகுகள் கட்டளை ஒன்றுக்கான செலவு ரூபா 100/= ஓர் அலகுக்கான கிரயம் ரூபா 20/= பராமரிப்புச் செலவு அலகு கிரயத்தில் 10% ஆகும். வழங்கப்பட வேண்டிய கட்டளைகளின் எண்ணிக்கை யாது?

(1) 2000 (2) 200 (3) 400
(4) 20 (4) 40

(.........)

27) கம்பனியொன்றின் உற்பத்தி பொருள் தொடர்பாக 15000 அலகுகளிற்கு மேல் அதிகரிக்கும் போது மேலதிக நிலையான கிரயமாக ரூபா 12000 தேவைப்படுகின்றது. கம்பனியின் குறித்த உற்பத்தி அலகுகள் தொடர்பாக ஏற்பட்ட மொத்தக் கிரயம் பின்வருமாறு

| உற்பத்தி அலகுகள் | மொத்தக் கிரயம் |
|---|---|
| 12000 | 96000 |
| 30000 | 162000 |

20000 அலகுகள் உற்பத்தி மட்டத்தில் மொத்தக் கிரயம் பின்வருவனவற்றுள் எது?

(1) ரூபா 120000 (2) ரூபா 100000 (3) ரூபா 108000
(4) ரூபா 132000 (5) ரூபா 142000

(.........)



agaram.lk
Scanned with CamScanner

➢ 28, 29 ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களை பயன்படுத்தவும் வரையறுக்கப்பட்ட கஜானா கம்பனியானது பழைய இயந்திரத்திற்குப் பதிலாக புதி இயந்திரமொன்றில் தனது பணத்தினை முதலீடு செய்வதற்கு எண்ணுகின்றது. மதிப்பிடப்ப தகவல்கள் பின்வருமாறு காணப்பட்டது.

| | ரூபா |
|---|---|
| புதிய இயந்திரத்தின் கொள்வனவு விலை | 200000 |
| பொருத்துதல் கிரயம் | 25000 |
| பழைய இயந்திரத்தின் கிரயம் | 100000 |
| பழைய இயந்திரத்தை விற்பனை செய்யக்கூடிய விலை | 50000 |
| ஆரம்பத் தொழிற்படு மூலதனம் | 35000 |

புதிய இயந்திரத்தின் பயன்படு ஆயுட்காலம் 5 வருடங்களாகும்.

தேறிய காசுப்பாய்ச்சல் பின்வருமாறு

| வருடம் | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| தேறிய காசுப்பாய்ச்சல் | 80000 | 60000 | 50000 | 40000 | 60000 |

28) இயந்திரம் தொடர்பில் ஆரம்ப முதலீடு

(1) ரூபா 160000 ஆகும் (2) ரூபா 200000 ஆகும்

(3) ரூபா 210000 ஆகும் (4) ரூபா 250000 ஆகும்

(5) ரூபா 275000 ஆகும் (.....

29) முதலீட்டினை மீளப்பெறும் காலம் எவ்வளவு?

(1) 04 வருடங்கள் (2) 03 வருடங்களும் 06 மாதங்களும்

(3) 03 வருடங்களும் 09 மாதங்களும் (4) 05 வருடங்கள்

(5) 04 வருடங்களும் 06 மாதங்களும் (.....

30) குத்தகை தொடர்பாக பல்வேறு கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A - பாதுகாப்பு மற்றும் நயக்கேடுகள் குத்தகைப் பெற்றவரின் பொறுப்பாகும்.

B - குத்தகை கால முடிவில் சொத்தின் மீதான உரிமை குத்தகைப் பெற்றவருக் மாற்றக்கூடியதாக இருத்தல்

C - சொத்தின் பொருளாதார ஆயுட்காலம் குத்தகைக் காலத்திற்கு மேலாக இருத்தல் முடியு

நிதிக் குத்தகையை வரையறுப்பதற்கு அமைவாக இருக்கும் கூற்று அல்லது கூற்றுக்கள்

(1) A மட்டும் (2) B மட்டும் (3) A மற்றும் B மட்டும்

(4) B மற்றும் C (5) A, B மற்றும் C ஆகிய அனைத்தும் (.....

agaram.lk

➢ 31 - 50 வரையுள்ள வினாக்களுக்கு சுருக்கமாக விடைகளை புள்ளிக்கோட்டில் எழுதுக.

31) பின்வரும் கூற்றுக்கள் உண்மையானது அல்லது பொய்யானது என்பதை குறி புள்ளிக்கோட்டில் "✓" எனும் அடையாளத்தில் காட்டுங்கள்.

| | | உண்மை | பொய் |
|---|---|---|---|
| A - | நிறுவனமொன்றின் கொடுக்கல் வாங்கல் தொடர்பான விரிவான பகுப்பாய்வொன்றை அதன் முகாமையாளருக்கு வழங்குவதே கணக்கீட்டின் அடிப்படை நோக்கம் | .................... | .................... |
| B - | கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்யும் போது இடம் பெறும் சகல வழுக்களும் பரீட்சை மீதியூடாக அறிய முடியும். | .................... | .................... |
| C - | பண அளவீட்டு எண்ணக்கருவிற்கு அமைய பணத்தின் பெறுமதி நிலையானதாக கருதப்படும் | .................... | .................... |
| D - | பண்டமொன்றை கொளவனவு செய்யும்போது குறிப்பிட்ட விலையில் இருந்து கழிக்கப்படுகின்ற கழிவானது பெற்ற கழிவுக் கணக்கில் செலவு வைக்கப்படும் | .................... | .................... |



Scanned with CamScanner

32) பின்வரும் கொடுக்கல் வாங்கல்களினூடாக வங்கி மீதியில் அதிகரிப்பு அல்லது குறைவு ஏற்படுகின்றதா என்பதனை குறிப்பிட்டுக் காட்டவும்.

| கொடுக்கல் வாங்கல்கள் | வணிகத்தின் வங்கிக் கணக்கு மீதி |
|---|---|
| (1) கடன்படுநர் ஒருவர் வணிகத்தின் வங்கியில் உள்ள நடைமுறைக் கணக்கில் காசோலை ஒன்றை வைப்பிலிடல் | .................................... |
| (2) வங்கியானது காசோலைப் புத்தகக் கட்டணத்தை அறவிடல் | .................................... |
| (3) வணிகத்தின் மின்சாரக் கட்டணமானது காசோலை மூலம் செலுத்தப்படல் | .................................... |
| (4) வங்கியில் வைப்பிலிடப்பட்ட காசோலையொன்று மறுக்கப்படல் | .................................... |

33) நிகழ்காலத்தில் பயன்படுத்தப்பட்டுவரும் கணக்கீட்டு மென் பொருள் பொதிகள் (ACCOUNTING PAKKAGES) எவை?

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

34) கணனி மயப்படுத்தப்பட்ட கணக்கீட்டின் அனுகூலங்கள் பிரதிகூலங்கள் தலா 2 இனைக் குறிப்பிடுக.

அனுகூலங்கள்

1. ....................................................................................................

2. ....................................................................................................

பிரதிகூலங்கள்

1. ....................................................................................................

2. ....................................................................................................

agaram.lk

35) 31.03.2015 ம் திகதியில் முடிவடைந்த வருடத்தின் உற்பத்தி வணிகமொன்றின் தகவல்கள் பின்வருமாறு

| | ரூபா 000ல் |
|---|---|
| மூலப்பொருட் கொள்வனவு | 1500 |
| நேர் உற்பத்திக் கூலிகள் | 800 |
| உற்பத்தி பொது மேந்தலைக் கிரயம் | 1100 |
| மூலப்பொருள் இருப்பின் குறைவு | 200 |
| மூலக்கிரயத்தில் கணிக்கப்பட்ட நடைமுறை வேலை இருப்பின் அதிகரிப்பு | 150 |

பின்வருவனவற்றை கணிப்பிடவும்

(1) மூலக் கிரயம் (ரூபா)

....................................................................................................

(2) உற்பத்திக் கிரயம் (ரூபா)

....................................................................................................



Scanned with CamScanner

36) வணிகமொன்றின் இருப்பு கொள்வனவு, வழங்கல் தொடர்பான தகவல்கள் தரப்பட்டுள்ளன.

2015.01.01 மீதி அலகொன்று ரூபா 500 வீதம் 100 அலகுகள்
2015.01.15 இருப்பு கொள்வனவு அலகொன்று ரூபா 550 வீதம் 400 அலகுகள்
2015.01.30 விநியோகம் 300 அலகுகள்

(1) வணிகம் இருப்பினை விலை இடுவது நிறையிடப்பட்ட சராசரி விலையிடல் முறையி... இருப்பின் 2014 ஜனவரி மாதத்திற்கான விற்பனைக் கிரயம் எவ்வளவு?

..........................................................................................................................

(2) வணிகம் இருப்பினை விநியோகிக்கும் போது முதல் உள்ள முதல்வெளி (FIF... முறையில் விலையிடுமாயின் 2015.01.31 இல் இருப்பின் கிரயம் யாது?

..........................................................................................................................

37) நலன்புரிச் சங்கமொன்றின் சொத்துக்கள் பொறுப்புக்கள் தொடர்பான தகவல்கள் தரப்பட்டுள்ளன.

| உருப்படிகள் | 2015.03.31 இல் ரூபா | 2014.03.31 இல் ரூபா |
|---|---|---|
| காசு | 12000 | 10000 |
| வங்கி | 22000 | 20000 |
| எழுது / பொருள் இருப்பு | 5000 | 3000 |
| பொறுப்புக்கள் | 3000 | 2000 |

(அ) 2015.03.31 இல் முடிவடையும் வருடத்துக்கான மேலதிகம் / பற்றாக்குறை

..........................................................................................................................

(ஆ) 2015.03.31 இல் திரண்ட நிதி

..........................................................................................................................

38) அட்டவணையில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு நிலைமையையும் மிக நன்றாக வெ... காட்டியுள்ள கணக்கீட்டு தத்துவத்துக்கு பொருத்தமான எழுத்தைக் குறிப்பிடுக.

A - ஒப்பிடக்கூடிய தன்மை
B - தோற்றத்திலும் பார்க்க கருத்து முக்கியத்துவம்
C - பாதுகாப்பு
D - பொருத்தமானது

| நிலைமை | பொருத்தமான எழுத்து |
|---|---|
| ✶ சொத்தொன்றை அதன் சந்தை விலையில் இனங்காணல் | .................... |
| ✶ நிதிக்குத்தகையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட சொத்து அதற்கிணைவான பொறுப்புடன் இனங்காணல் | .................... |
| ✶ நிதி அறிக்கைகளில் கடந்த வருட புள்ளி விபரங்களை அறிக்கையிடல் | .................... |
| ✶ கடன்பட்டோரிடமிருந்து வசூலித்துக் கொள்ளக்கூடிய ஆற்றல் மதிப்பீடு செய்யப்பட்டு செம்மை செய்தல் | .................... |

39) இலாப நட்டங்களை சமனாக பகிர்ந்து கொள்ளும் ஒப்பந்தத்தின் அடிப்படையில் அகல்யா என்போர் நடாத்திச் சென்ற பங்குடமை வணிகத்தில் 2015.04.01 சுசி பங்காளராக சேர்க்கப்பட்டார். அன்றைய தினத்தில் இருந்து அகல்யா, அகல்யா, சுசி 3 : 2 : 1 எனும் விகிதத்தில் இலாப நட்டங்களை பகிர உடன்பட்டனர். அத்தினத்தில் வணிகத்தின் நன்மதிப்பை சீராக்கியதன் பின் சுசியின் மூலதனம் ரூ குறைவடைந்ததுடன் அகல்யாவின் மூலதனம் ரூபா 50000 ஆல் அதிகரித்தது. 2015.04.01 ல் பங்குடமையின் நன்மதிப்பு

..........................................................................................................................

agaram.lk



Scanned with CamScanner

40) வணிகமொன்றின் கணக்காண்டு 2015.03.31 ல் முடிவடைகின்றது. 2015.01.01 இல் பெற்றுக் கொள்ளப்பட்ட வங்கிக் கடன் ரூ 1200000 ஆனது மாதாந்தப் படி 60 தவணைகளில் செலுத்தி முடித்தல் வேண்டும். ஒவ்வொரு மாத தவணைப் பணமும் அடுத்துவரும் மாத ஆரம்பத்தில் செலுத்தப்படல் வேண்டும். 2015 மார்ச் மாத தவணைப் பணம் நிலுவையாக உள்ளது.

2015.03.31 இல் முடிவடைந்த நிதி வருடத்தில் இக்கடன் தொகையானது எவ்வாறு நடைமுறைப் பொறுப்பு நடைமுறையல்லாப் பொறுப்பு என வகைப்படுத்திக் காட்டப்படும்?

(1) நடைமுறையல்லா பொறுப்பு ........................................

(2) நடைமுறைப் பொறுப்பு ........................................

❖ வரையறுத்த சாரங்கன் கம்பனி 01.04.2011 இல் ரூபா 400000 ரூபாவுக்கு இயந்திரம் ஒன்றை கொள்வனவு செய்தது. அதன் பயன்தரு ஆயுட்காலம் 10 வருடங்கள் என மதிப்பிடப்பட்டது. 31.03.2015 ல் அதனது பயன்தரு ஆயுட்காலம் 12 வருடங்கள் என மதிப்பிடப்பட்டது.

41) 31.03.2015 ல் சொத்தின் முன்கொண்டு செல்லும் பெறுமதி

........................................

42) 31.03.2015 ல் முடிவடைந்த வருட வருமானக் கூற்றில் காட்டப்படவேண்டிய பெறுமானத் தேய்வு தொகை

........................................

43) தளபாட உற்பத்தி வணிகமொன்றின் பின்வரும் ஒவ்வொரு கிரய மூலங்களுக்கும் ஒவ்வொரு உதாரணம் தருக.

(A) நேர் மூலப் பொருள் ........................................

(B) நேர் ஊழியம் ........................................

(C) நேரில் பொருட்கள் ........................................

(D) நேரில் செலவுகள் ........................................

➢ **44, 45 ம் வினாக்களுக்கு விடையளிக்க பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

நிறுவனமொன்றின் இரண்டு கணக்கீட்டு வருடத்துக்கான சில தகவல்கள் பின்வருமாறு

| | 2014 (ரூபா 000) | 2013 (ரூபா 000) |
|---|---|---|
| விற்ற சரக்கின் கிரயம் | 315 | 240 |
| மொத்த இலாப வீதம் | 25% | 20% |
| கடன்படுநர் | 42 | 28 |
| தேறிய சொத்துக்கள் | 160 | 75 |
| மொத்த வெளியார் பொறுப்பு | 65 | 45 |

விற்பனைகள் யாவும் கடனுக்கே மேற்கொள்ளப்பட்டதுடன் வருடத்தில் 360 நாட்கள் எனக் கருதுக.

44) (அ) கடன்படுநர் சுழற்சி விகிதம்

........................................

(ஆ) கடன் சேகரிப்புக் காலம்

........................................

45) 2013 ம் வருடத்துடன் ஒப்பிடும் போது 2014 ம் வருடத்தில் மொத்தச் சொத்துப் புரள்வு விகிதம் அதிகரித்துள்ளதா? அல்லது குறைவடைந்துள்ளதா? அல்லது மாற்றம் இல்லை என்பதனை செய்கைகளுடன் குறிப்பிடுக.

........................................

agaram.lk



Scanned with CamScanner

46) 4 கம்பனிகளின் தரவுகள் தரப்பட்டுள்ளன.

| கம்பனி | நிலையான கிரயம் | விற்பனை அலகுகள் | அலகு (ரு) மாறும் கிரயம் | அலகுப் (ரு) பங்களிப்பு | சமப்பாட்டு புள்ளியில் அலகுகள் | இலாபம் நட்டம் |
|---|---|---|---|---|---|---|
| A | 5000 | 1000 | 5 | அ | 1000 | 0 |
| B | 14000 | 4000 | 3 | 7 | ஆ | 14000 |
| C | 32000 | இ | 6 | 8 | 4000 | (8000) |
| D | 21000 | 10000 | 4 | 3 | 7000 | ஈ |

மேற்படி எழுத்துக்களுக்கான பெறுமதிகளைத் தருக.

(அ) ........................................................................

(ஆ) ........................................................................

(இ) ........................................................................

(ஈ) ........................................................................

47) வரையறுத்த சனா கம்பனி புதிய இயந்திரம் ஒன்றின் மீதான முதலீடு பற்றி ஆராய்கின்றது.

* கொள்வனவு விலை 500000
* இயந்திரம் நிறுவும் செலவு 60000
* உள்கொண்டு வரும் செலவு 40000
* பயன்தகு ஆயட் காலம் 5 வருடங்கள்
* ஈடுபடுத்திய மூலதனத்தை முதல் மூன்று வருடங்களில் மீளப் பெறமுடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.
* பெறுமானத் தேய்வு நீங்கலான வருடாந்த செலவுகள் 50000

கணிப்பிடுக.

(1) முதல் வருடத்தில் தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா ........................

(2) முதல் வருடத்தில் அதிகரித்த இலாபம் ரூபா ........................

agaram.lk

48) இலங்கை கணக்கீட்டு நியமத்தை தயாரிப்பதில் நெறிப்படுத்துகின்ற பாராளுமன்ற சட்டம் எது?

........................................................................

49) பின்வரும் விடயங்களில் நிதி நிலைமைக் கூற்று தயாரிப்பு தினத்துக்கு பின்னரான நிகழ்வுகள் சீராக்கம் செய்ய தேவையற்ற விடயங்களை எடுத்துக்காட்டும் நிகழ்வுகளுக்கு (✓) அடையாளம் இடுக.

A - இறுதி இருப்பின் பெறுமதி வீழ்ச்சி ☐

B - புதிய பங்கு வழங்கல் ☐

C - நடைமுறை அல்லாத சொத்துக் கொள்வனவு ☐

D - கடன்படுநர் முறிவடைதல் ☐

50) நிறுவனமொன்று RG எனும் மூலப்பொருளை கொள்வனவு செய்கின்றது. முதலாவது மாதம் முதல் 6 மாத காலத்தில் ஒவ்வொன்றும் ரூ 50 படி விலை 500 அலகுகளை கொள்வனவு செய்துள்ளது. அதன் பின்னர் ஒவ்வொரு மாதமும் ரூ 5 படி விலை அதிகரித்துச் செல்கிறது. அலகுகளின் எண்ணிக்கை 500 ஆகும். ஒவ்வொரு மாதமும் உற்பத்திக்கென 400 அலகுகள் வீதம் வழங்கப்பட்டன. வருட இறுதியில் பண்டகசாலையில் எஞ்சியுள்ள இருப்புக்களின் பெறுமதி யாது? ........................................................................



Scanned with CamScanner

யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, யூன் - 2015
## Term Examination, June - 2015

| தரம் :- 13 (2015) | கணக்கீடு - II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

அறிவுறுத்தல்கள்:-

- முதலாம், இரண்டாம் வினாக்கள் உட்பட ஆறு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- ஒவ்வொரு விடையும் புதிய தாளில் ஆரம்பிக்கப்படுதல் வேண்டும்.
- ஒவ்வொரு பொருத்தமான செய்முறைகள் விடைகளுடன் இணைக்கப்படல் வேண்டும்.

01) வரையறுக்கப்பட்ட பானுஜா கம்பனியின் புத்தகங்களிலிருந்து 31.03.2015 இல் எடுக்கப்பட்ட பரீட்சை மீதி வருமாறு

பெறுமதி 000

| | | |
|---|---|---|
| கூறப்பட்ட மூலதனம் (சா.ப) | | 16000 |
| பொது ஒதுக்கம் | | 3000 |
| நிறுத்தி வைத்த வருவாய் 01.04.2014 | | 1200 |
| மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் | | 300 |
| காணி | 10300 | |
| கட்டடம் கிரயம் | 7000 | |
| மோட்டார் வாகனம் | 18000 | |
| தேய்வு ஏற்பாடு 01.04.2014 ல் | | |
| கட்டடம் | | 900 |
| மோட்டார் வாகனம் | | 3600 |
| குத்தகை விற்பனையாளர் க/கு | | 480 |
| செலுத்திய பங்கு இலாபம் - இடைக்காலம் | 600 | |
| இயக்குனர் சம்பளம் | 160 | |
| நிர்வாகச் செலவு | 200 | |
| விற்பனை விநியோகச் செலவு | 600 | |
| கடன்கொடுத்தோர் க/கு | | 750 |
| கடன்பட்டோர் | 720 | |
| அறவிடமுடியாத கடன் | 60 | |
| விற்பனைகள் | | 24000 |
| விற்பனைக் கிரயம் | 12000 | |
| செலுத்திய வருமான வரி | 1600 | |
| 10% தொகுதிக்கடன் | | 2000 |
| 31.12.2015 இல் இருப்புக்கள் | 300 | |
| காசும் காசுக்குச் சமமானவை | 1200 | |
| செலுத்திய தொகுதிக்கடன் வட்டி | 150 | |
| ஏனைய வருமானம் | | 660 |
| | 52890 | 52890 |

agaram.lk



Scanned with CamScanner

பின்வருவன சீராக்கங்கள் செய்யப்படுதல்

(i) நிர்வாகச் செலவினுள் 31.07.2015 இல் முடிவடையும் வருடாந்தக் காப்புறுதி பூட்கைக்கு செலுத்திய கட்டணம் ரூபா 150000 உள்ளடங்கும்.

(ii) 31.03.2015 இல் உள்ள இருப்புக்கள் 15.04.2015 இல் ரூபா 40000 செலவில் ரூபா 29... இற்கு விற்கப்பட்டது.

(iii) 31.03.2015 இல் செலுத்த வேண்டிய வருடாந்த நிலையான குத்தகைத் தவணை கட்டணம் ரூபா 150000 செலுத்தப்பட்டமை கடன் கொடுத்தோர் கணக்கில் ... வைக்கப்பட்டது. இக் குத்தகைத் தவணைக் கட்டணத்தில் உள்ளடங்கிய நிலையா குத்தகை வட்டி ரூபா 30000 ஆகும்.

(iv) அநாதை விடுதி ஒன்றிற்கு நன்கொடையாக வழங்கிய பொருட்கள் ரூபா 120000 ஏடுகளில் பதியப்பட்டிருக்கவில்லை.

(v) வேலையில் இருந்து நீக்கிய ஊழியர் ஒருவரினால் இழப்பீடு கோரி வழக்குத் தாக்... செய்தமையால் ரூபா 90000 நட்டஈடு செலுத்த வேண்டி வரும் என கம்பனியின் ... ஆலோசகர் நம்பகரமாகத் தெரிவித்துள்ளார்.

(vi) வரிகழிக்க முன் இலாபத்தில் 50% வருமானவரி செலுத்தப்படுதல் வேண்டும்.

(vii) 2015.03.31 இல் காணியினைத் தற்போதய சந்தை மதிப்பின் படி ரூபா 9600... பெறுமதியாக மீள் மதிப்பிடப்பட்டுள்ளமை பதியப்பட்டிருக்கவில்லை. இக்காணி ... வருடம் முதல் முதலாக மீள்மதிப்பிடப்பட்டபோது ஏற்பட மிகை மீள் மதிப்... ஒதுக்கமாகக் காட்டப்பட்டுள்ளது.

(viii) 01.10.2010 இல் ரூபா 1200000 இற்கு வாங்கிய மோட்டார் வாகனம் 01.04.2014 இல் ரூ... 660000 இற்கு விற்பனை செய்தமையால் பெற்ற காசு ஏனைய வருமானமா... பதியப்பட்டது தவிர வேறு பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ix) கட்டடம், மோட்டார் வாகனம் என்பவற்றுக்கு முறையே கிரயப் பெறுமதி மீது 5%, 1... தேய்வு இடப்படுதல் கொள்கையாகும்.

(x) கடன்பட்டோர் மீதியில் ரூபா 20000 அறவிடமுடியாக் கடனாகப் பதிவழிப்பு செய்வது... எஞ்சிய கடன்பட்டோரில் 10% ஐயக்கடன் ஏற்பாடு செய்தல்.

(xi) விற்பனை மீது 1% உத்தரவாத விற்பனைத் தரகு செலுத்துதல் என்ற ஒப்பந்தத்திற்கமை... செலுத்திய விற்பனைத் தரகு ரூபா 400000 விற்பனை விநியோகச் செலவில் உள்ளடங்கி உள்ளன.

(xii) நிறுத்தி வைத்த வருவாயைப் பயன்படுத்தி இயக்குனர்கள் ரூபா 600000 பெறுமதி... உபகாரப் பங்கு வழங்குவதற்கும் ரூபா 300000 பொது ஒதுக்கக் கணக்கி... மாற்றுவதற்கும் தீர்மானித்தனர்.

வேண்டப்படுவது

1. 31.03.2015 இல் பிரசுரிப்பதற்குப் பொருத்தமான முறையில் வருமானக்கூற்று
2. 31.03.2015 இல் உள்ளபடியான ஐந்தொகை
3. 31.03.2015 இல் உரிமைமாற்றக்கூற்று (விரிவான குறிப்புக்கள் செய்கைகள் உட்பட)

(20 புள்ளி...)

agaram.lk



Scanned with CamScanner

02) அ) X, Y, Z என்ற பங்குடமையில் பயிற்சி பெறும் கணக்காளரினால் தயாரிக்கப்பட்ட பங்காளர் நடைமுறைக்கணக்கு பின்வருமாறு.

31.03.2015 இல் முடிவுற்ற ஆண்டுக்கான பங்காளர் நடைமுறைக்கணக்கு

| விபரம் | X | Y | Z | விபரம் | X | Y | Z |
|---|---|---|---|---|---|---|---|
| மீ / வ | | | 100 | மீ / வ | 2500 | 3100 | |
| பற்று | 200 | 100 | 50 | சம்பளம் | 6000 | 6000 | 6000 |
| மீ / செ | 11250 | 13150 | 10200 | மூலதன வட்டி | 2500 | 2750 | 3000 |
| | | | | கடன்வட்டி | | 500 | |
| | | | | இலாபம் | 450 | 900 | 1350 |
| | 11450 | 13250 | 10350 | | 11450 | 13250 | 10350 |
| | | | | மீ / வ | 11250 | 13150 | 10200 |

மேலதிகத் தகவல்கள்

1) முகாமைக் கருமங்களில் ஈடுபடும் X பங்காளர் மட்டும் மாதாந்தம் 500/= சம்பளம் உரித்துடையவர்

2) பங்காளரான Y யினால் பங்குடமைக்காக வழங்கிய கடனுக்கான வட்டி நடைமுறைக் கணக்கினுள் மட்டுமே உள்வாங்கப்பட்டுள்ளது.

3) X : Y : Z என்பவர்களுக்கிடையே இலாபம் 3 : 2 : 1 என்றவாறு பகிரப்படல் வேண்டும்.

i) X, Y, Z பங்காளருக்குரிய சரியான இலாபப் பகிர்வைக் கணிப்பிடுக.

ii) 31.03.2015 இல் X, Y, Z பங்காளரின் திருத்தப்பட்ட நடைமுறைக்கணக்கு மீதி

(5 புள்ளிகள்)

agaram.lk

ஆ) அமலன், விமலன், கமலன் பங்குடமையிலிருந்து கமலன் 31.03.2015 இல் விலகினார். 31.03.2015 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பங்காளர்களின் மூலதனக் கணக்குடன் தொடர்புடைய தகவல்கள் சில வருமாறு,

- 01.04.2014 இல் பங்குடமையின் மொத்த மூலதனக் கணக்கு மீதி 600000
- பங்காளரான கமலன் விலகும் தருணத்தில் சொத்துக்களானவை மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கமலனுக்கு உரித்தாக அவரின் மூலதனக் கணக்கிற்கு ரூபா 25000 மாற்றப்பட்டது.
- கமலன் விலகும் தருணத்தில் நிறுவனத்திலிருந்து 100000/= பெறுமதியான மோட்டார் வாகனத்தை எடுத்துக்கொண்டு அதனைத் தனது மூலதன மீதியில் சீர் செய்யுமாறு கூறியிருந்தார்.
- 31.03.2015 இல் கமலனுக்குச் செலுத்த வேண்டிய தொகையில் 50% ஆகிய 80000 ரூபா கடன் கணக்கிற்கு மாற்றப்பட்டு மிகுதி உடனடியாகக் காசாகக் கொடுத்து தீர்க்கப்பட்டது.
- 31.03.2015 இல் கமலனின் நடைமுறைக்கணக்கு மீதி 5000 (வரவு மீதி)
- பங்காளருக்கிடையில் இலாபம் சமமாகப் பகிரும் அதேவேளையில் இலாப வீதத்திற்கமைய மூலதன மீதி பேணப்படுகின்றது.



Scanned with CamScanner

- நன்மதிப்பானது மூலதனக் கணக்கின் ஊடாகச் சீராக்கப்படுகின்றது.
  - i) நிறுவன நன்மதிப்பின் பெறுமதி யாது?
  - ii) அமலன், விமலன் ஆகியோரின் 31.03.2015 ல் மூலதன மீதி யாது?

(5 புள்ளிகள்)

இ) X, Y ஆகிய உற்பத்தித் திணைக்களங்களையும், களஞ்சியம், பராமரிப்பு என்ற 2 சேவைத் திணைங்களங்களையும் கொண்டுள்ள உற்பத்தி நிறுவனத்தின் தகவல்கள் திணைக்களங்களிற்கிடையே முதற்கட்ட மேந்தலைப் பகிர்வு மேற்கொண்ட பின் உள்ளவாறான மேந்தலை விபரம்

| | | |
|---|---|---|
| உற்பத்திப் பகுதி | X | 100 000 |
| உற்பத்திப் பகுதி | Y | 200 000 |
| களஞ்சியம் | | 70 000 |
| பராமரிப்பு | | 40 000 |

* திணைக்களம் X இல் பயன்படுத்திய இயந்திர மணித்தியாலம் 4000
* திணைக்களம் Y இல் பயன்படுத்திய ஊழிய மணித்தியாலம் 5000

- அலகொன்றிற்கான மூலப்பொருள் கிரயம் 300
- அலகொன்றிற்கான நேர்கூலி 170

பொருளொன்றிற்குத் திணைக்களம் X இல் 02 இயந்திர மணித்தியாலமும் திணைக்களம் Y ல் 03 ஊழிய மணித்தியாலமும் தேவைப்படுகின்றன.

சேவைக்கிரய மேந்தலைப் பகிர்வு விபரம் வருமாறு

| விபரம் | X | Y |
|---|---|---|
| பராமரிப்புப் பகுதி | 2 | 2 |
| களஞ்சியப் பகுதி | 4 | 3 |

உற்பத்திக் கிரயத்தில், பொது மேந்தலைகளிற்காக 20% உம், இலாபத்திற்காக 30% உம் சேர்க்கப்படுகிறது.

தயாரிக்குக.

i) மேந்தலை மீள் பகிர்வுக் கூற்று

ii) அலகிற்கான விற்பனை விலை

(10 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

03) அ) 2015.01.01 ஆம் திகதியில் அனேகன் வணிகத்தின் சொத்துக்கள் பொறுப்புக்கள் பின்வருமாறு

| | (ரூ 000ல்) |
|---|---|
| மோட்டார் வாகனம் | 3000 |
| தளபாடம் பொருத்திகள் | 190 |
| வியாபார வருமதியாளர் | 540 |
| வியாபார சரக்கிருப்பு | 86 |
| வங்கியும் காசும் | 274 |
| வியாபார கொடுக்குமதியாளர் | 700 |
| சென்மதி செயற்பாடு செலவுகள் | 10 |



agaram.lk
Scanned with CamScanner

2015 ஜனவரி மாதத்தினுள் வணிகத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களும் நிகழ்வுகளும் பின்வருமாறு

| கொடுக்கல் வாங்கல் நிகழ்வு இலக்கம் | திகதி | கொடுக்கல் வாங்கல் நிகழ்வுகள் |
|---|---|---|
| (1) | 2015.01.05 | ரூபா 80000 பெறுமதியான தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. |
| (2) | 2015.01.08 | அனேகனால் சொந்தச் சேமிப்பில் இருந்த பணம் ரூ 250000 வணிகத்தில் மேலதிக மூலதனமாக இடப்பட்டது. |
| (3) | 2015.01.15 | ரூ. 180000 பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்யப் பட்டதுடன் காசோலையொன்று வழங்கப்பட்டது |
| (4) | 2015.01.17 | ரூ 130000 கிரயமான பண்டங்கள் ரூபா 160000 க்கு விற்பனை செய்யப்பட்டது. இதற்காக ரூ50000 பெறுமதியான காசோலை பெறப்பட்டது. எஞ்சிய பெறுமானம் கடனாகும். |
| (5) | 2015.01.20 | வியாபார வருமதியாளரிடம் இருந்து ரூபா 530000 காசு கிடைக்கப்பெற்றதுடன் ரூபா 10000 அறவிடமுடியாக் கடனாகப் பதிவழிக்கப்பட்டது. |
| (6) | 2015.01.23 | ஆரம்பத்தில் சென்மதிச் செயற்பாட்டுச் செலவுகள் உட்பட செயற்பாட்டு செலவுகளுக்காக ரூபா 70000 காசு செலுத்தப் பட்டது. |
| (7) | 2015.01.27 | உடமையாளர் தனது தனிப்பட்ட தேவை கருதி ரூ 16000 கிரயம் பொருட்களை நிறுவனத்தில் இருந்து பற்றியுள்ளார். |
| (8) | 2015.01.30 | மோட்டார் வாகனத்தின் பயன்படு காலம் 5 வருடங்கள் எனவும், எஞ்சிய பெறுமானம் எதுவும் இல்லை எனக் கொண்டு நேர்கோட்டு முறையில் தேய்வு செய்யப்பட்டது. |

agaram.lk

வேண்டப்படுவது

(1) மேற்காட்டிய தொடக்க மீதிகள் உட்பட அனைத்து கொடுக்கல் வாங்கல் நிகழ்வுகளில் ஏற்பட்ட தாக்கத்தினை (பெறுமானங்களுடன்) கணக்கீட்டு சமன்பாட்டினை பயன்படுத்திக் காட்டவும் பெறுமானங்களின் முன்னால் அதிகரிப்பு ஏற்படுமாயின் (+), குறைவு ஏற்படுமாயின் (−) அடையாளத்தினை இடவும்.

(இதற்காக பின்வரும் மாதிரி அமைப்பை பயன்படுத்தவும்)

| இலக்கம் | மோட்டார் வாகனம் | தளபாடம் | இருப்பு | வருமதியாளர் | காசு வங்கி | பொறுப்பு | | உரிமை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | கடன் கொடுத்தோர் | சென்மதி | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |

(2) தேறிய சொத்துக்களை அடிப்படையாகக் கொண்டு 2015 ஜனவரி மாதத்துக்கான தேறிய இலாபம் அல்லது நட்டத்தைக் கணிப்பிடவும்



Scanned with CamScanner

ஆ) ஆரணியா வணிகத்தின் 2015.03.31 இல் தயாரிக்கப்பட்ட நிலுவைச் சமன்பாட்டின் வரவு பக்கமானது செலவுப்பக்கத்தை விட ரூபா 8100 இனால் கூடுதலாகக் காட்டப்பட்டுள்ளமை தெரியவந்தது. பின்வரும் வழுக்கள் இடம்பெற்றமை தெரியவந்தது. (வணிகம் கட்டுப்பாட்டு கணக்கை பேணுவதில்லை)

(1) செலுத்தப்பட்ட ரூ3000 ற்கான விளம்பரக் கட்டணமானது அக்கணக்கில் பதிவு செய்யப்படவில்லை.

(2) தொலைபேசிக் கட்டணக்கணக்கில் மீதியான ரூபா 1600 பரீட்சை மீதிக்கு கொண்டு செல்லப்படவில்லை.

(3) வாகனப் பழுதுபார்த்தல் செலவான ரூபா 5000 வாகனக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

(4) ரூபா 1200 பெறுமதியான கொள்வனவுத் திரும்பல்கள், கொள்வனவுத்திரும்பல் நாளேட்டில் இருமுறை பதிவு செய்யப்பட்டுள்ளது.

(5) வட்டி வருமானம் ரூ 500 ஆனது கொடுத்த வட்டிக் கணக்கில் வரவு வைக்கப் பட்டுள்ளது.

(6) விற்பனை நாளேட்டின் கூட்டுத் தொகையானது ரூ 4500 ஆல் கூட்டிக் கணிப்பிடப் பட்டுள்ளது.

வேண்டப்படுவது

i) வழுக்களை திருத்துவதற்கான பொது நாளேட்டுப் பதிவுகள்

ii) தொங்கல் கணக்கு

(5 புள்ளிகள்)

(மொத்தப் புள்ளிகள் - 15)

04) அ) 2015.03.01 ஆம் திகதியன்று சரவணன் வணிகத்தின் கொள்வனவுப் பேரேட்டு மீதிகள் கீழே தரப்பட்டுள்ளன.

(000 ல்)

| | |
|---|---|
| சேரன் | 25000 |
| சோழன் | 44000 |
| பாண்டியன் | 12000 |
| | 81000 |

2015 மார்ச் மாதத்தினுள் கடன் கொடுநர்களுடன் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் சுருக்கம் வருமாறு

| கடன் கொடுநர் | கொள்வனவு (ரூபா) | கொள்வனவுத்திரும்பல் (ரூபா) | கொடுப்பனவுகள் (ரூபா) | பெற்ற கழிவு (ரூபா) |
|---|---|---|---|---|
| சேரன் | 160000 | - | 130000 | 6000 |
| சோழன் | 300000 | 4000 | 300000 | - |
| பாண்டியன் | 120000 | - | 120000 | 2000 |
| வன்னியன் | 50000 | - | 16000 | - |
| மொத்தம் | 630000 | 4000 | 566000 | 8000 |

2015 மார்ச் 01 ஆம் திகதியன்று கடன்கொடுநர் பேரேட்டு அட்டவணை மீதியின் கூட்டுத்தொகையானது கட்டுப்பாட்டுக்கணக்கு மீதியுடன் இணங்கியிருந்தது. 2015 மார்ச் 31 ஆம் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியானது கடன்கொடுநர் பேரேட்டு மீதிகளின் கூட்டுத்தொகையுடன் இணங்கவில்லை. இவ் வித்தியாசத்துக்கான காரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.



agaram.lk
Scanned with CamScanner

(1) சேரனிடம் இருந்து கிடைக்கப் பெற்ற கழிவு ரூ 3000 ஆனது கடன்கொடுநர் கட்டுப்பாட்டுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு பெற்ற கழிவுக் கணக்கில் செலவு வைக்கப்பட்டது தவிர வேறு எந்தவித பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

(2) சோழனுக்கு அனுப்பப்பட்ட ரூபா 4000 பெறுமதியான வரவுத்தாள் அவரது கணக்கில் பதிவு செய்யப்படவில்லை.

(3) ரூ 20000 பெறுதியான உடன்காசு விற்பன கடன்கொடுநர் கட்டுப்பாட்டுக் கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளது.

(4) 2015 மார்ச் 28 அம் திகதியில் பிரபாவிடமிருந்து கடனுக்குப் பெற்ற பொருட்களுக்குரிய ரூ12000 பெறுமதியான கொள்வனவுப் பட்டியலானது கொள்வனவு நாளேட்டில் பதிவு செய்யப்படவில்லை.

(5) கொள்வனவு நாளேட்டின் மொத்தம் ரூபா 603000 ஆக கட்டுப்பாட்டுக் கணக்கில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வேண்டப்படுவது

(1) மேற்குறிப்பிட்ட தகவல்களை சீராக்க முன் 2015 மார்ச் மாதத்துக்கான கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக்கு கணக்கு

(2) கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கின் சரியான மீதியுடன் கடன் கொடுநர் பேரேட்டு மீதியின் கூட்டுத்தொகையை இணங்கச் செய்வதற்கான கூற்று

(3) 2015.03.31 ஆம் திகதியன்று நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்படவேண்டிய கடன்கொடுநர் மீதி

(10 புள்ளிகள்)

ஆ) 2015 மார்ச் 31ம் திகதியன்று வணிகமொன்றின் வங்கி கூற்றின் வரவு மீதி ரூபா 8000 காணப்பட்டது. அத்திகதியில் வணிகத்தின் வங்கிக் கூற்று மீதியுடன் வங்கிக் கணக்கு மீதியையும் ஒப்பிட்டபோது பின்வரும் தகவல்கள் வெளிப்பட்டன.

(i) வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 25000 பெறுமதியான காசோலையொன்று இதுவரையில் வசூலிக்கப்படவில்லை.

(ii) வழங்குனர் ஒருவருக்கு வழங்கப்பட்ட ரூபா 18000 பெறுமதியான காசோலையொன்று இதுவரையில் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(iii) வங்கிக் கூற்றிற்கமைய வங்கிக் கட்டணமாக ரூபா 500, காசோலைப் புத்தகக் கட்டணமான ரூபா 350 வங்கிக்கு வழங்கிய நிலையியற் கட்டளையின் அடிப்படையில் செலுத்திய காப்புறுதிக் கட்டணம் ரூபா 1400 என்பவை நிறுவனத்தின் வங்கிக் கணக்கில் பதிவு செய்யப்படவில்லை.

(iv) நிறுவன வாடகைக்காக வழங்கப்பட்ட ரூபா 15000 பெறுமதியான காசோலை மறுக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பான பதிவுகள் நிறுவனத்தின் வங்கிக் கணக்கில் பதிவு செய்யப்படவில்லை

வேண்டப்படுவது

(i) 2015 மார்ச் மாதத்திற்கான வங்கிக் கணக்கிணக்கக் கூற்று

(ii) சீராக்கப்படுவதற்கு முன்னர் 2015 மார்ச் 31 அம் திகதியிலுள்ளவாறான வங்கிக் கணக்கு மீதி

(5 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)



agaram.lk
Scanned with CamScanner

05) அ) வணிகமொன்றின் இயந்திரங்கள் தொடர்பான தகவல்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

(i) 2011.04.01 ல் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரத்தின் பெறுமதி ரூபா 90000 ஆக இருந்ததுடன் 10 வருடங்களின் பின்னர் அதன் இழிவுப் பெறுமதி ரூபா 10000 ஆகவும் மதிப்பிடப்பட்டிருந்தது.

(ii) 2013.10.01 இல் மேற்குறிப்பிட்ட இயந்திரத்தின் வினைத்திறனை அதிகரிப்பதற்காக ரூபா 40000 பெறுமதியான புதிய பகுதியொன்று அதற்கு பொருத்தப்பட்டது. அப் பொருத்துதல் காரணமாக இயந்திரத்தின் பயன்படு ஆயுட்காலம் அத்திகதியில் இருந்து எதிர்வரும் 10 வருடங்களாகுமெனவும் இழிவுப் பெறுமதியில் மாற்றம் இல்லை எனவும் மதிப்பிடப்பட்டது.

(iii) 2015.01.01 இல் மேற்குறிப்பிட்ட இயந்திரம் ரூபா 120000 பெறுமதியுடைய அதே போன்ற இயந்திரமொன்றுடன் மாற்றிக்கொள்ளப்பட்டது. இதற்காக பழைய இயந்திரத்துடன் மேலதிகமாக ரூபா 20000 செலுத்த வேண்டி ஏற்பட்டது.

(iv) புதிய இயந்திரத்தின் பயன்படு ஆயட்காலம் 10 வருடங்களாகவும், இழிவு பெறுமதி அதற்கு இல்லை எனவும் மதிப்பிடப்பட்டது.

வேண்டப்படுவது

(1) இயந்திரப் பரிமாற்றம் தொடர்பிலான நாட்குறிப்பு பதிவுகள்

(2) இயந்திரப் பரிமாற்றம் காரணமாக 2015.03.31 ல் முடிவடையும் வருடத்தின் இலாபத்தில் ஏற்படும் தாக்கத்தினை காட்டுக. (7 புள்ளிகள்)

ஆ) மகிந்தா வாணிபம் முறையாக கணக்குப் பதிவுகளை பராமரிக்கவில்லை எனினும் பின்வரும் தகவல்கள் பெறக்கூடியதாக இருந்தது.

| | 01.04.2014 | 31.03.2015 |
|---|---|---|
| காணி | 100000 | 100000 |
| கட்டிடம் | 200000 | 285000 |
| வாகனம் | 80000 | 125000 |
| வியாபார சரக்கிருப்பு | - | 50000 |
| சென்மதி செயற்பாட்டு செலவு | 5000 | 10000 |
| காகிதாதி இருப்பு | 3000 | 2000 |
| காசுமீதி | 80000 | ? |
| வியாபார வருமதியாளர் | 50000 | 40000 |
| வியாபார கொடுக்குமதியாளர் | 80000 | 60000 |

2014 / 2015 முடிவடைந்த ஆண்டுக் காலத்தில் இடம் பெற்ற கொடுக்கல் வாங்கல்களும் நிகழ்வுகளும் வருமாறு

| | |
|---|---|
| அறவிடமுடியாத கடன் பதிவளிப்பு | 2000 |
| அனுமதித்த கழிவு | 3000 |
| கிடைத்த கழிவு | 1000 |
| வாகனக் கொள்வனவு | 50000 |
| கட்டிட விரிவாக்கல் செலவு | 100000 |
| செயற்பாட்டுச் செலவு கொடுப்பனவு | 30000 |
| வருமதியாளரிடம் பெற்றவை | 320000 |
| காகிதாகி கொள்வனவு | 1000 |
| காசு விற்பனை | 30000 |
| வியாபார கொடுக்குமதியாளருக்கு கொடுப்பனவு | 230000 |

வேண்டப்படுவது

(1) 31.03.2015 ல் முடிவடைந்த வருடத்துக்கான வருமானக்கூற்று

(2) 31.03.2015 ல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று

(8 புள்ளிகள்)

agaram.lk



Scanned with CamScanner

06) அ) பின்வரும் தகவல்கள் வரையறுத்த "இலங்கை வேந்தன்" பொதுக்கம்பனி தொடர்பானவை

(i) 31.03.2015 ல் தெரிவு செய்யப்பட்ட சில சொத்துக்கள், பொறுப்புக்கள், தேறிய சொத்துக்கள், செலவுகள் வருமாறு

| | ரூபா |
|---|---|
| சரக்கிருப்புக்கள் | 62000 |
| வருமதியாளர் | 60000 |
| 10% திபெஞ்சர் | 150000 |
| வட்டிச் செலவுகள் | 15000 |
| வருமானவரிச் செலவுகள் | 30000 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 50000 |
| தேறிய சொத்துக்கள் | 200000 |
| ஆண்டுக்கான மொத்த இலாபம் | 150000 |

(ii) வருடத்தில் 360 நாட்கள் என கொள்க. எல்லா விற்பனைகளும் கடனுக்கே மேற்கொள்ளப்படுகிறது.

(iii) 31.03.2015 இல் இருப்பு கடன்படுநர் தொடர்பான தேறிய மாற்றம்

இருப்பு அதிகரிப்பு ரூபா 4000

கடன்படுநர் அதிகரிப்பு ரூபா 20000

(iv) 31.03.2015 இல் கணிப்பிடப்பட்ட தேறிய இலாப வீதம் 12% ஆகவும், இருப்பு சுழற்சி காலம் 36 நாட்கள் எனவும் கணிப்பிடப்பட்டது.

வேண்டப்படுவது

(1) வருடாந்த விற்பனை பெறுமதி

(2) மொத்த இலாப வீதம்

(3) மொத்த சொத்து வருவாய் வீதம்

(4) கடன்பட்டோர் புரள்வு வீதம்

(5) வட்டி பாதுகாப்பு வீதம்

(10 புள்ளிகள்)

ஆ) வணிகமொன்றின் மூன்று ஊழியர்கள் தொடர்பான 2015 மார்ச் மாதத்தில் தயாரிக்கப்பட்ட சம்பளப் பட்டியல் பின்வருமாறு

| ஊழியர் பெயர் | மொத்தச் சம்பளம் | கழிப்பனவு | | | மொத்த கழிப்பனவு | தேறிய சம்பளம் | தொழில்தருநர் பங்களிப்பு | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | சம்பள முற்பணம் | EPF 10% | கடன் தவணைப் பணம் | | | EPF 15% | ETF 3% |
| அமல் | 40000 | 6000 | 3000 | - | 9000 | 31000 | 4500 | 900 |
| விமல் | 50000 | - | 4200 | 8000 | 12200 | 37800 | 6300 | 1260 |
| கமல் | 35000 | 4000 | 3000 | - | 7000 | 28000 | 4500 | 900 |
| | 125000 | 10000 | 10200 | 8000 | 28200 | 96800 | 15300 | 3060 |

agaram.lk



Scanned with CamScanner

மேலதிக தகவல்கள்

(1) மாதாந்த சம்பளங்கள் தொடர்ந்து வரும் மாதத்தில் செலுத்தப்படும்

(2) EPF, ETF போன்ற கொடுப்பனவுகள் அடுத்துவரும் மாதத்தில் செலுத்தப்படும்

(3) ஊழியர் சம்பள முற்பணக் கணக்கு மீதி, ஊழியர் கடன் கணக்கு மீதி 2015.03.01 ‹ முறையே 30000/=, ரு 32000 ஆக காணப்பட்டது.

வேண்டப்படுவது

(அ) பின்வரும் பேரேட்டுக் கணக்குகள்

(1) சம்பளம் கூலி கட்டுப்பாட்டுக் கணக்கு

(2) சம்பள முற்பணக் கணக்கு

(3) ஊழியர் கடன் கணக்கு

(ஆ) (1) வருமானக் கூற்றில் 31.03.2015 ல் காட்டப்படும் உருப்படிகள்

(2) நிதிநிலைமைக் கூற்றில் 31.03.2015 ல் காட்டப்படும் உருப்படிகள்

(5 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

07) அ) அன்பொளி கல்வி நிறுவனம் தனது கல்விச் சுற்றுலா சம்பந்தமான செலவுகளை திட்ட இட்டுள்ளது. அதன் விபரம் வருமாறு

| | | |
|---|---|---|
| ✶ | 50 பிரயாணிகளுக்கான இருக்கைகள் கொண்ட பஸ்வண்டி ஒன்றிற்கான போக்குவரத்துச் செலவு | ரு 2000[illegible] |
| ✶ | ஒவ்வொரு மாணவருக்குமான அடையாள அட்டை செலவு | ரு 120 |
| ✶ | சுற்றுலா பதாதைக்கான அச்சடித்தல் செலவு | ரு 4000 |
| ✶ | சுற்றுலாவினை ஒழுங்குபடுத்துவதற்கான செலவு | ரு 2000 |
| ✶ | மாணவர் ஒருவருக்கான சாப்பாட்டுச் செலவு | ரு 250 |
| ✶ | மாணவர் ஒருவருக்கான அனுமதிச் சீட்டுச் செலவு | ரு 130 |
| ✶ | வாடகைக்கு அமர்த்திய புகைப்படப்பிடிப்பாளர் கட்டணம் | ரு 4000 |
| ✶ | மாணவர் ஒருவரிடம் இருந்து பெறவேண்டிய கட்டணம் | ரு 2000 |

வேண்டப்படுவது

(1) சுற்றுலாவிற்கு எதிர்பார்க்கப்படும் மொத்த நிலையான செலவு?

(2) சமப்பாட்டு புள்ளியை அடைவதற்கு தேவையான சுற்றுலாவில் பங்குபற்றுவோ[illegible] தொகை?

(3) ரு 15000 இலாபத் தொகையினைப் பெறுவதற்கு தேவையான மாணவர்களி[illegible] எண்ணிக்கை?

(4) 50 மாணவர்கள் மட்டும் கலந்து கொள்வார்களாயின் சுற்றுலாவிற்கான மேலதிக தொ[illegible] அல்லது பற்றாக்குறை காட்டுவதற்கான கூற்று

(5) சமப்பாட்டுப் புள்ளியை 10 பேருடன் அடைவதற்கு மாணவர் ஒருவரிடம் இருந்[illegible] அறவிட வேண்டிய கட்டணம் யாது?

(5 புள்ளிகள்)

ஆ) பிரவீன் கம்பனியானது பின்வரும் இரு முதலீட்டு வாய்ப்புக்கள் தொடர்பில் கவன[illegible] செலுத்தப்பட்டுள்ளது. இரு இயந்திரங்களினதும் பயன்படு ஆயுட்காலம் 4 வருடங்களாகு[illegible] இவற்றில் ஒரு இயந்திரத்தை மாத்திரம் தெரிவு செய்தல் வேண்டும்.

agaram.lk



Scanned with CamScanner

| | இயந்திரம் A (ரு) | இயந்திரம் B (ரு) |
|---|---|---|
| ஆரம்ப முதலீடு | 250000 | 250000 |
| 1 ஆம் வருட இலாபம் | 85000 | 65000 |
| 2 ஆம் வருட இலாபம் | 50000 | 45000 |
| 3 ஆம் வருட இலாபம் | 75000 | 60000 |
| 4 ஆம் வருட இலாபம் / நட்டம் | (32000) | 22000 |
| 4 ஆம் வருட முடிவில் இழிவுப் பெறுமதி | 50000 | 50000 |

பிரவீன் கம்பனியின் எதிர்பார்ப்பு வருவாய் வீதம் 15% ஆகும்.

15% கழிவுக்காரணி

| வருடம் | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| கழிவுக்காரணி | 0.87 | 0.76 | 0.66 | 0.57 |

வேண்டப்படுவது

(1) கணக்கீட்டு வருவாய் வீதம் (சராசரி முதலீட்டினை அடிப்படையாகக் கொண்டு)

(2) முதலீடு திரும்பி வரும் காலம்

(3) தேறிய நிகழ்காலப் பெறுமதி

(4) மேலே (1), (2), (3) என்பவற்றிற்கேற்ப தெரிவு செய்ய வேண்டிய பொருத்தமான முதலீட்டுச் சந்தர்ப்பத்தினை வெவ்வேறாகக் காட்டுக.

(5) பொருத்தமான முதலீட்டை தெரிவு செய்க.

(5 புள்ளிகள்)

இ) பின்வரும் தகவல்கள் வரையறுத்த சங்கீதா கம்பனியின் ஏடுகளில் இருந்து 31.03.2015 ல் எடுக்கப்பட்டவை

| | |
|---|---|
| 01.04.2014 ல் காசும் காசுக்கு சமமானவை | 40000 |
| செலுத்திய வருமான வரி | 8000 |
| செலுத்திய பங்குலாபம் | 3000 |
| தொகுதிக்கடன் வழங்கல் | 60000 |
| செலுத்திய வட்டிக்கடன் | 20000 |
| செலுத்திய வட்டி | 2000 |
| வாகனக் கொள்வனவு | 30000 |
| தளபாட விற்பனை | 50000 |
| பெற்ற வட்டி | 4000 |
| பெற்ற பங்குலாபம் | 2000 |
| நிலைய நிர்வாகச் செலவு | 12000 |
| விற்பனை விநியோகச் செலவு | 8000 |
| ஏனைய செயற்பாட்டு செலவு | 11000 |
| விற்பனை | 50000 |
| கொள்வனவு | 90000 |
| கடன்பட்டோரிடம் சேமிப்பு | 320000 |
| கடன்கொடுத்தோருக்கு கொடுப்பனவு | 80000 |
| கட்டிடம் விஸ்தரிக்கும் செலவு | 6000 |

தயாரிக்குக.

31.03.2015 இல் நேர்முறையில் அமைந்த காசுப்பாய்ச்சற் கூற்று

(5 புள்ளி)

(மொத்தம் 15 புள்ளிகள்)



agaram.lk
Scanned with CamScanner